4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், உடுமலைப்பேட்டை

சாட்சியின் சாட்சியம் **திரு.M.நம்பிராஜன்,பி.ஏ.,பி.எல்.,** 4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி, உடுமலைப்பேட்டை அவர்களால் உறுதி கூறப்படுகிறது.

**MCOP No.52/2022** **நாள்: 23.01.2026** **எ.ம.சா.1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | அருண் | தொழில் | : | துணை மேலாளர், Reliance General Insurance |
| த/பெ | : | சுந்தரராமன் | கிராமம் | : | Chennai |
| வயது | : | 28 | தாலுகா | : | Chennai |
| | | | மாவட்டம் | : | Chennai |

**சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு,**

**முதல் விசாரணை -**

நான் இந்த மனுவில் 2ம் எதிர்மனுதாரர் நிறுவனத்தின் துணை மேலாளர் ஆவேன். இந்த வழக்கில் எனது சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். அதை பதிவு செய்து கொள்ள வேண்டுகிறேன்.

எ.ம.சா.ஆ. 1 – TN 66 E 1294 என்ற வாகனத்தின் காப்பீடு சான்றிதழ் நகல்

எ.ம.சா.ஆ. 2 – விபத்து பதிவேடு நகல்

**மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை –**

TN 66 E 1294 என்ற வாகனத்திற்கு காப்பீடு நிலுவையில் இருந்தது என்றால் சரிதான். மேற்படி காப்பீட்டு நிபந்தனையின் வாகனத்தின் உரிமையாளர் மற்றும் 3ம் நபர்களுக்கு ஏற்படும் இழப்பிற்கு இழப்பீடு வழங்கலாம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். விபத்து இரண்டு வாகனங்களால் ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல. முதல் தகவல் அறிக்கையிலும், இறுதியறிக்கையிலும் விபத்தில் இரண்டு வாகனங்கள் சம்பந்தப்பட்டுள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையிலும்,

இறுதியறிக்கையும் 4 சக்கர வாகனம் இரு சக்கர வாகனத்தின் மீது மோதி விபத்து ஏற்பட்டுள்ளது என்று சொல்லியுள்ளார்கள் என்றால் சரிதான். விபத்து பதிவேட்டில் பதிவு செய்வதற்கு மருத்துவரிடம் யார் விபத்து பற்றி தகவல் சொன்னார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது. விபத்தினால் தான் இறந்துபோனவர் இறந்துள்ளார் என்று உடற்கூராய்வு அறிக்கையில் சொல்லியுள்ளார்கள் என்றால் சரிதான். இறந்துபோனவர் எவ்வித நிறுவனத்தையும் நடத்தி வரவில்லை என்று நாங்கள் பொய்யாக எதிருரையிலும், முதல் விசாரணை சத்திய பிரமான வாக்குமூலத்திலும் சொல்லியுள்ளோம் என்றால் சரியல்ல. இறந்துபோனவர் வருமானம் சம்பந்தமான ஆவணங்களை மனுதாரர் இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளார் என்றும், அது உண்மையானவை என்றால் சரியல்ல. இறந்தவர் எங்கள் நிறுவனம் காப்பீடு செய்யப்பட்டுள்ள வாகனத்தால் இறந்துள்ளார் என்பதால் மனுதாரருக்கு இழப்பீடு தொகை செலுத்த கடமைப்பட்டவர் என்றால் சரியல்ல, இறந்தவர் தானாகவே தான் விபத்தை ஏற்படுத்திகொண்டார் என்று சாட்சி கூறுகிறார். விபத்து பதிவேடு தவிர விபத்திற்கு இறந்தவர் தான் காரணம் என்று நாங்கள் எந்த ஆவணத்தையும் முன்னிலைப்படுத்தவில்லை என்றால் சரியல்ல. மனுதாரர் கோரிய இழப்பீடு கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சி விசாரிக்கப்பட்ட, சாட்சியின் சாட்சியம் தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு, சாட்சியாலும் படித்து பார்க்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பு சாட்சியால் கையொப்பம் இடப்பட்டது.

M NAMBIRAJAN

Digitally signed by M NAMBIRAJAN
Date: 2026.01.23 15:10:20 +0530

4வது கூடுதல் மாவட்ட நீதிபதி,

உடுமலைப்பேட்டை.